தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 28

2010 மே 11, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு."

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

161—

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***61126—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, குளமங்கலம் வடக்கு, குளமங்கலம் தெற்கு, பனங்குளம் கிராமங்களை உள்ளடக்கி புதிதாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

[2010 மே 11

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் புதிதாகத் தொடங்க குறைந்தது 4,940 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப் பரப்பு இருக்க வேண்டும். ஆனால், ஆலங்குடி தொகுதி, குளமங்கலம் வடக்கு, குளமங்கலம் தெற்கு, பனங்குளம் கிராமங்களை உள்ளடக்கிய பகுதிகளில் பயிரிடக்கூடிய மொத்த நிலப்பரப்பு 3,421 ஏக்கர் மட்டுமே உள்ளதால், புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளமங்கலம் வடக்கு, குளமங்கலம் தெற்கு, பனங்குளம் ஆகியவை மூன்று ஊராட்சிகள். மக்கள்தொகை அடிப்படையில் பார்த்தால் 3 ஊராட்சிகளிலும் சுமார் 15 ஆயிரம் மக்கள் வாழ்கின்றார்கள். குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ஏக்கர் கணக்கு கொஞ்சம் குறைவாக இருந்தாலும், ஒரு காலத்தில் குளமங்கலத்திற்கு மட்டுமே கூட்டுறவுச் சங்கம் இருந்தது. அதைக் கலைத்து, வேறொரு கூட்டுறவுச் சங்கத்தோடு இணைத்துவிட்டார்கள். ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது, புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆரம்பிக்கப்படும் என்கின்ற வாக்குறுதியை அளித்தார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதியிலே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க முன்வர வேண்டும் என்று உங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற நிலைமையை உங்களிடத்திலே நான்

2010 மே 11]

தெரிவித்திருக்கிறேன். எனக்கு வந்த கணக்குப்படி நான் குறிப்பிட்டிருக்கிறேன். அப்படி ஏதாவது கூடுதல், குறைவு இருக்குமானால், பரிசீலித்து, பிறகு தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராசசேகரன், சொல்லுங்கள்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது, அப்போதே மாண்புமிகு அமைச்சரிடத்திலே நேரடியாக இதுபற்றி நான் கேட்டிருக்கின்றேன். குறைந்தபட்சம் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டுமென்று சொல்கின்றார். ஆகவே, 3,900 ஏக்கர் இருக்கின்றது என்கின்ற அடிப்படையில், அது தவறாக இருக்கும் என்று நான் சொல்லவில்லை. ஆகவே, இதையே வைத்து ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா, முன்வர வேண்டும் என்று மீண்டும் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் சிறப்பு இனமாகக் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து ஆவன செய்யப்படும்; அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் கடன் பெற்றவர்கள், அரசு ஏதேனும் சலுகைகள் வழங்குமா என்கிற எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள். அங்கே பணியாற்றும் ஊழியர்களும் சிரம நிலையில் இருந்து வருகிறார்கள். இதுகுறித்து துறை உரிய நடவடிக்கை எடுத்து உதவுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியில் உள்ள கருங்குளம் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிமூலமாக 12 ஆயிரம் உறுப்பினர்களும், 11 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளும் பயனடைந்து வந்தார்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வங்கியில் பணிபுரிந்த ஊழியர்கள், 50 இலட்சம் ரூபாய் பெறுமான நகைகளைக் கையாடல் செய்தார்கள். இதன் காரணமாக இவ்வங்கி மூடப்பட்டது. கையாடல் செய்த ஊழியர்கள்மீது வணிகக் குற்றவியல் புலனாய்வுத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. பத்து ஆண்டுகள் ஆகியும் இது குறித்த நடவடிக்கை முடிக்கப்பட்டதா, இல்லையா? நடவடிக்கை முடிக்கப்பட்டு, இந்த வங்கியினை மீண்டும் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குச் சென்றால், நம் இஷ்டத்திற்கு எதையும் செய்ய முடியாது. நீதிமன்றத்திலிருந்து எப்படி முடிவு வருகிறதோ, அப்படித்தான் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS